சைவநெறிக்கூடம்
அருள்ஞானமிகு ஞானலிங்கேச்சுரர் திருக்கோவில்
DER VEREIN SAIVANERIKOODAM / CLUB DE SAIVANERIKOODAM
Arulganamigu Gnanalingesurar Tempel
Verein für tamilische Religion und Kultur
L'Association de la religion et de culture tamoule

இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின்
சனாதிபதி
Presidential Secretariat,
Galle Face
Colombo 01
Sri Lanka

ps@presidentsoffice.lk

## திரு. அனோஜன் சிவராசா அவர்களின் விடுதலைக்காக விரைவு வேண்டுகோள்

**மாண்புமிகு சனாதிபதி அவர்களே**

சுவிற்சர்லாந்து, பேர்ன் நகரில் இயங்கி வரும் சைவத்தமிழ் மன்றம் ஆகிய நாம் திரு. அனோஜன் சிவராசா அவர்களின் உயிரையும் எதிர்காலத்தையும் கருத்தில் கொண்டு இந்த விரைவான மாந்தர் அன்புமிகு வேண்டுகோளை தங்களிடம் மிகுந்த மரியாதையுடனும் உள்ளத்தில் பெரும் இடருடனும் முன்வைக்கின்றோம்.

திரு. அனோஜன் சிவராசா அவர்கள் இலங்கை நாட்டின் குடிமகன் தற்போது சவுதி அரேபியாவில் மிகக் கடுமையான சட்ட நடவடிக்கையை எதிர்கொண்டு வருவதாகவும், அவருக்கு உயிர் ஒறுப்பு (மரண தண்டனை) விதிக்கப்படக்கூடிய மிக நேரிடர் (ஆபத்தான) சூழ்நிலை ஏற்பட்டுள்ளதாகவும் நாம் அறிந்து மிகவும் வருந்துகின்றோம்.

இந்த நிலைமை எங்களை மிகவும் ஆழமாகப் பாதித்துள்ளது. ஒரு இலங்கை குடிமகனின் உயிர் இவ்வாறு இடரில் இருக்கும் நிலையில், அவருடைய உயிரைக் காப்பாற்றுவதற்கான அனைத்து சட்டபூர்வமான மற்றும் உங்கள் முன் உள்ள வழிகளையும் ஆய்ந்து செயல்பட வேண்டி நிற்கின்றோம்.

திரு. அனோஜன் அவர்கள் தெரிவித்ததாகக் கூறப்படும் கருத்துகள் தொடர்பாக ஏற்பட்டுள்ள சிக்கல் மத மற்றும் சட்டரீதியான உணர்வுகளை நாங்கள் புரிந்துகொள்கின்றோம். எந்தவொரு மதத்தையும், குறிப்பாக இஸ்லாம் மதத்தையும் அல்லது முஸ்லிம் மக்களின் மத உணர்வுகளையும் புண்படுத்துவது எங்களுடைய நோக்கம் அல்ல. அதேவேளை, மனிதன் தவறு செய்யக்கூடியவன் என்பதையும், செய்த தவறை உணர்ந்து மனப்பூர்வமாக வருந்தி, தனது வாழ்க்கையை மாற்றிக்கொள்ளும் வாய்ப்பு ஒவ்வொரு மனிதருக்கும் வழங்கப்பட வேண்டும் என்பதையும் நாங்கள் சைவத் தமிழர்களாக ஆழமாக நம்புகின்றோம்.

எங்களுக்குக் கிடைத்த தகவலின்படி, திரு. அனோஜன் சிவராசா அவர்கள் தற்போது தனது செயலுக்காக ஆழ்ந்த வருத்தத்தையும் நெஞ்சத்தில் பெரும் பழிச்சுமையும் கொண்டுள்ளார். தான் செய்தது ஒரு தவறு என்பதை அவர் உணர்ந்துள்ளதாகவும், அந்தத் தவறிலிருந்து பாடம் கற்றுக்கொண்டு தனது வாழ்க்கையை நேர்மையான முறையில் தொடர விரும்புவதாகவும் அறிகின்றோம்.

மாண்புமிகு சனாதிபதி அவர்களே,

திரு. அனுஜன் சிவராசா அவர்கள் இலங்கை நாட்டின் குடிமகன் என்பதால், அவருடைய உயிரைக் காப்பாற்றுவதற்கும், அவருக்கு மனிதாபிமான அடிப்படையில் இரண்டாவது வாய்ப்பை பெற்றுத்தருவதற்கும் தங்களுடைய உயர்ந்த பதவியின் மூலம் இயன்ற அனைத்து முயற்சிகளையும் மேற்கொண்டிருப்பீர்கள் என்பதை நாம் அறிவோம். இவ் இடர்வேளை நாமும் எங்களது மன்றத்தின் சார்பாளராக மிகவும் பணிவுடன் தங்கள் முன்னெடுப்புக்களை விரைந்து ஆற்றுமாறு வேண்டுகை விடுக்கின்றோம்.

குறிப்பாக, தாங்கள்:

- சவுதி அரேபியாவின் தொடர்புடைய அதிகாரிகளுடன் கடுகெதியில் தொடர்புகொண்டு திரு. அனுஜன் சிவராசா அவர்களின் நிலைமை குறித்து தலையிட்டு உதவுமாறும், இலங்கை அரசாங்கத்தின் தொடர்புடைய அமைச்சுகள் மற்றும் அதிகாரிகளுக்கு உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டுகின்றோம்.
- சவுதி அரேபிய அரசாங்கத்துடனும் தொடர்புடைய அனைத்து அதிகாரிகளுடனும் அனைத்து வழிமுறைகளையும் கைக்கொண்டு பேச்சுவார்த்தை நடத்துமாறு வேண்டி நிற்கின்றோம்.
- அவருடைய தண்டனையை இரக்கத்தின் அடிப்படையில் குறைப்பதற்கும், இயன்றால் அவரை விடுதலை செய்து இலங்கைக்கு திரும்புவதற்கும் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறும் மிகவும் அன்புடனும் பரிவு உணர்வுடனும் இத்தால் தங்களிடம் வேண்டுகோள் விடுக்கின்றோம்.
- இது எந்தவொரு அரசியல் நோக்கத்துடனும் முன்வைக்கப்படும் வேண்டுகோள் அல்ல. ஒரு மனித உயிரைக் காப்பாற்ற வேண்டும் என்ற ஆழமான மனிதாபிமான உணர்விலிருந்தே இந்த வேண்டுகோளாக முன்வைக்கின்றோம்.
- ஒரு தவறான வார்த்தை அல்லது ஒரு தவறான செயல் ஒருவரின் முழு வாழ்க்கையையும் முடிவுக்குக் கொண்டு வர வேண்டிய அவசியமில்லை. உண்மையான மனப்பழிச் சாட்டையும் மனமாற்றத்தையும் வெளிப்படுத்தும் ஒருவருக்கு தனது வாழ்க்கையைத் திருத்திக்கொள்ள ஒரு வாய்ப்பு வழங்கப்பட வேண்டும்.
- இலங்கை அரசாங்கம் இந்த விடயத்தை மிக உயர்ந்த முன்னுரிமையுடன் எடுத்துக்கொண்டு, சவுதி அரேபிய அரசாங்கத்துடனும் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுடனும் தொடர்ந்து தொடர்புகொண்டு, திரு. சிவராசா அவர்களின் உயிரைக் காப்பாற்றுவதற்கான அனைத்து முயற்சிகளையும் மேற்கொள்ளும் என நம்புகின்றோம்.
- உயிர் ஒறுப்பு (மரண தண்டனை) தவிர்க்கப்பட்டு, திரு. அனுஜன் சிவராசா அவர்களுக்கு வாழ்க்கையை மீண்டும் தொடங்குவதற்கான ஒரு இரண்டாவது வாய்ப்பு வழங்கப்பட வேண்டும் என்பதே எங்களுடைய மிக ஆழமான வேண்டுகோளாகும்.

ஒரு இலங்கைத் தமிழ்க் குமடிமகனின் உயிரைக் காப்பாற்ற தாங்கள் மேற்கொள்ளும் ஒவ்வொரு முயற்சிக்கும் எங்களுடைய அமைப்பு என்றும் நன்றியுடனும் இருக்கும்.

இந்த விரைந்து வேண்டுகோளை பரிவுடனும் அக்கறையுடனும் நன்நோக்கிலும் ஆய்ந்து, உடனடி நடவடிக்கை எடுக்குமாறு பணிவுடன் கேட்டுக்கொள்கின்றோம்.

தங்களுடைய தலையீட்டையும் உடனடி நடவடிக்கையையும் எதிர்பார்த்திருக்கின்றோம்.

மரியாதையுடன்

T. Sasi

திரு. தர்மலிங்கம் சசிகுமார்
செந்தமிழ் அருட்சுனையர்
சைவநெறிக்கூடம் இணைப்பாளர்
பேர்ன், சுவிற்சர்லாந்து 21. 09. 2026

Hindu Priest and President
Verein «Saivanerikoodam»
Europaplatz 1B
3008 Bern
Switzerland

+41 78 645 30 42
saivanerikoodam@hotmail.com